# வில்லி, புத்தன் என்ற



வில்லி, புத்தன் என்ற இருவேடுவர்களுக்காக ,

வில்லிபுத்தூர் என்ற தலமதில் அமர்ந்தவனே ! அரங்கனே !

வில்லி, புத்தன்.....

பூமாலையால் உன்னைதினம் அலங்கரித்து ,

அறியாதவர்க்கும் நீயேபரனென்று உணர்த்தி ;

பாமாலையால் உன்னைப்பல்லாண்டு பாடிய ,

பெரியாழ்வார் அவதரித்தத் திருத்தலமல்லவா !

வில்லி, புத்தன்.......

பேதைப்பெண்ணொருத்தி அன்று உமக்குத்தான் ,

சூடிக்களைந்திட்ட பூமாலைகளை சூடிமகிழ்ந்திட ;

கோதையின் மனம்குளிர்ந்திட அவளிருக்குமிடம் ,

தேடிவந்து நீரும் மணந்தத் திருத்தலமல்லவா !

வில்லி, புத்தன்.....